REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 26உ வியாழன் (11—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 27உ வெள்ளி (12—8—55) [இதழ் 50

அணு சக்தி செய்யும் அற்புதம்!

இத்தாலி நாட்டு விஞ்ஞானிகள், அணுசக்தியைக் கொண்டு சோளமை விளைவித்திருக்கிறார்கள். சாதாரணமாக, சோளமை விளைவதற்கு ஆகும் காலத்தைவிட 5 மாதங்கள் குறைவாக—அதாவது 64 நாட்களிலேயே—அணு சக்தியைக்கொண்டு சோளமை விளைவித்திருக்கிறார்களாம்!

பருவமில்லாத காலத்தில் விதைக்கப்பட்ட சோளமை விதைகள், அணு சக்திப் பிரயோகத்தால் சீக்கிரமே விளைந்தன என்பது மட்டுமின்றி 45 சதவிகிதம் அதிகமாகவும் விளைந்திருக்கின்றன என்று கூறப்படுகிறது.

மன்றம் ஏறி மானத்தை மீட்பாராம்!

லட்சம் ரூ. நஷ்ட ஈடு தேவையாம்!

ஒரு திங்களுக்குள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமாம்!

தன் மீது குற்றஞ் சாட்டினவர்களை ஜெகத் நாராயண் எச்சரிக்கிறார்

சாந்திகார், ஆக. 10—

தன்மீது இலஞ்சக் குற்றம் சுமத்திய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேர் மீது, பஞ்சாப் கல்வி மந்திரியான லாலா ஜெகத் நாராயணன் என்பவர், சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறாராம்.

ஒரு மாதகாலத்திற்குள் அந்த சட்ட சபை உறுப்பினர்கள் எழுத்துமூலம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும், இல்லாவிட்டால் ஒரு இலட்சம் ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்போவதாகவும், தனது வழக்கறிஞர்மூலம் அனுப்பியுள்ள 'நோட்டீசி'ல் அவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

காங்கிரஸ் மந்திரி சபை உறுப்பினரான ஜெகத் நாராயண் மீது, எதிர்க் கட்சியினர் இலஞ்சக் குற்றம் சுமத்தியதும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவை என்று காங்கிரஸ் மேலிடம் 'தீர்ப்பு' வழங்கியதும் நினைவிலிருக்கலாம்.

கைக்குத்தல் அரிசிக்கு 'யோகம்' பிறக்கிறது!

விற்பனை வரியிலிருந்து விலக்கு

சென்னை, ஆக. 10—

மாநிலத்தில் கைக்குத்தல் அரிசியை மக்கள் உபயோகப்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன், சென்னை சர்க்கார், கைக்குத்தல் அரிசிக்கு விற்பனை வரியினின்றும் விதிவிலக்குச் செய்துள்ளனராம்.

இந்திய அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது?

வேலை தேடித் தரும் நிறுவனங்கள் மாநில சர்க்கார் வசமாகும்

பம்பாய், ஆக. 10—

வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கென நிறுவப்பட்டுள்ள வேலை தேடித்தரும் நிர்வாகங்களின்மேல் இருந்துவரும் பொறுப்பை, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களின் தலையில் கட்டி விடுவதென முடிவு செய்துள்ளனராம்!

இந்த முடிவுகளுக்கிணங்க, வருகிற செப்டம்பர் திங்கள் முதல் பம்பாய் மாநிலத்திலுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள் அனைத்திலும் பம்பாய் மாநில சர்க்கார் பொறுப்பேற்றுக்கொள்ளும் எனத் தெரிகிறது.

மலேயாவுக்கு சுதந்திரமும், சுயாட்சியும் அரசியல் ரீதியிலேயே பெற உறுதி கொண்டிருப்பதாக மலேயா முதல் மந்திரி பதவி ஏற்றபின் வானொலிமூலம் அறிவித்தார்.

காமராசர் தலைமையில் காவடி!

திட்டத்தை சுமந்துகொண்டு டில்லிக்கு பயணம்

அதிகாரிகள் தூதுக் குழு புறப்பட்டுவிட்டது

சென்னை, ஆக. 11—

வருகிற 12, 13-ந் தேதிகளில் புதுடில்லியில் நடைபெற இருக்கின்ற தேசிய அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில், சென்னை மாநிலத்தின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் பரிசீலிக்கப்படும்போது, மாநில முதலமைச்சருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு சென்னை சர்க்கார் அதிகாரிகள் சிலர் புதுடில்லிக்குப் பயணமாகியுள்ளனராம்.

இன்று விமானத்திலேயே முதலமைச்சர் காமராசரும், அவரது சக அமைச்சர்கள் சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோரும் புதுடில்லி செல்ல இருக்கின்றனராம்.

மாநில நிதி இலாகா செயலாளர் டி. ஏ. வர்கீஸ், மராமத்து இலாகா செயலாளர் ஆர். எம். சுந்தரம், சுகாதார இலாகா செயலாளர் ஆர். கே. கோபால்சாமி, விவசாய இலாகா செயலாளர் என். எஸ் அருணாசலம், கூட்டுறவு ரெஜிஸ்திரார் பழனியப்பா ஆகியோர் தற்போது புறப்பட்டுள்ள அதிகாரிகளின் குழுவில் அடங்கியுள்ளனராம்.

ஜனாதிபதி ஐசனோவரை குருஷ்சேவ் ஏமாற்றினார்?

ஆம்ஸ்டர்டாம், ஆக. 10—

நான்கு வல்லரசு மாநாடு ஜினீவாவில் நடைபெற்றபோது, முதல் நாளன்று, அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜுகோவின் மகன் திருமணத்திற்கென சில விலையுயர்ந்த பொருள்கள் வாங்கி பரிசளித்ததாக செய்தி வந்ததல்லவா?

இப்போது அமெரிக்கப் பத்திரிகை ஒன்று இதுபற்றி வெளியிட்டுள்ள செய்தியில், ஜனாதிபதி ஐசனோவர் ஏமாற்றப்பட்டதாகக் கூறுகிறது.

ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து வெளிவரும் 'டி டெலிகிராப்' என்ற அந்த இதழ் குறிப்பிடுவதாவது:—

"மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதவர் போஹ்லன், ரஷ்ய மந்திரி ஜுகோவின் மகளுக்கு, ஐசனோவர் திருமணப் பரிசு வழங்கியதுபற்றி விசாரித்தபோது, 'ஜனாதிபதி ஏமாற்றப்பட்டிருக்கிறார்,' என்று தெரிய வருகிறது.

"நால்வர் மாநாட்டின் முதல் நாளன்று, ஜனாதிபதி ஐசனோவரை, ரஷ்யக் கம்யூனிஸ்ட் செயலாளர் குருஷ்சேவ் தனியாக அழைத்துச் சென்று 'ஜுகோவின் மகளுக்கு வரும் சனிக்கிழமை யன்று திருமணம் நடப்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டிருக்கிறார்.

"உடனே ஐசனோவர் யுத்த காலத்தில் தன்னுடன் ஜுகோவ் உழைத்த நண்பர் என்ற காரணத்துக்காக அவரது மகளுக்கென ஒரு வானொலிப் பெட்டி, ஒரு உயர்ந்த பவுண்டன் பேனா ஆகியவற்றை வாங்கி திருமணப் பரிசாக ஜுகோவிடம் தந்திருக்கிறார்.

"ரஷ்யாவிலுள்ள அமெரிக்கத் தூதவர் இதுபற்றி விசாரித்தபோது, '(1) ஜுகோவின் மகளுக்குத் திருமணம் எங்கு நடந்தது? —(2) யாருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்?—(3) திருமணம் செய்யக்கூடிய வயதுடைய மகள் உண்மையிலேயே ஜுகோவிற்கு உண்டா?—(4) ஜுகோவிற்குப் பெண் குழந்தையே இருக்கிறதா, இல்லையா?—என்பதையே அறிந்துகொள்ள இயலவில்லை,' என்று தெரிவித்திருக்கிறார்.

"குருஷ்சேவ், உண்மையில் பெரிய 'தமாஷ் பேர்வழி' என்று,

(4-ம் பக்கம் பார்க்க)

பிலாய் தொழிற்சாலைக்கு ரஷ்ய எஞ்சினீயர்!

மாதம் ரூ. 4,000 ஊதியம்!

பிலாய் உருக்குத் தொழிற்சாலையில், பிரதம நிர்மாண எஞ்சினீயராக நியமிக்கப்பட்டிருக்கும் ரஷ்ய எஞ்சினீயரான க்ராடன்கோவ் என்பாருக்கு, வரிவிதிப்புகளிலிருந்து விலக்குடன் மாதம் ஒன்றுக்கு ரூ. 4,000 ஊதியம் தரப்படுமாம்!

மேற்படி எஞ்சினீயர் இந்தோ-சோவியத் ஒப்பந்தத்தின்படி நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேரு பண்டிதர் ரஷ்யா சென்றிருந்த காலை அங்கு அவர் பார்வையிட்ட பிரும்மாண்டமான ஒரு உருக்கு ஆலையை நிர்மாணித்தவர் இவர்தானும்!

அயல்நாடுகளுக்கு 'அனுமார்'கள்!

புதுடில்லி, ஆக. 10—

இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில், 8 அயல்நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து 72,884 குரங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்திருக்கிறார்.

ஆதாரமற்றவையாம்!

சென்னை, ஆக. 10—

அறந்தாங்கி தாலுகாவிலுள்ள சில கிராமங்களில் போலீசார், விவசாயிகளிடம் அக்கிரமமாக நடந்துகொண்டனர் என்பதாக வந்திருந்த புகார்கள் அனைத்தும் விசாரிக்கப்பட்டன என்றும், விசாரிக்கப்பட்ட பின்னர், அவைகளனைத்தும் ஆதாரமற்றவை எனத் தெரியவந்துள்ளதாயும் நிதிஅமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

தடைகள் நீக்கப்படும்!

மேற்கு நாடுகளில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இதுவரை சோவியத் சர்க்கார் விதித்து வந்திருக்கின்ற செய்தித் தணிக்கை விதிகள் அனைத்தும், முழுமையுமாக ரத்து செய்யப்பட்டுவிடலாம் என்று சோவியத் அயல்நாட்டிலாகா அதிகாரி ஒருவர் சூசகமாகத் தெரிவித்திருக்கிறாராம்.

காஷ்மீரில் கொந்தளிப்பு?

'அரசியல் நிர்ணய சபையின் முடிவு செல்லாது'

'நேர்மையான வாக்கெடுப்பு வேண்டும்'

ஷேக் அப்துல்லா குழுவினரின் புது இயக்கம்

"காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை, இப்போது பாகிஸ்தான் வசமுள்ள 'ஆசாத் காஷ்மீரி'ல் வாழும் காஷ்மீர் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினரின் பிரதிநிதித்துவம் பெற்றதல்ல;

"காஷ்மீர் போர் நிறுத்த எல்லையின் இப்பகுதி மட்டும், காஷ்மீரின் ஆட்சி முறை பற்றிய அடிப்படையை நிர்ணயித்துவிட முடியாது;

"ஏதாவது ஒரு நாட்டுடன் (இந்தியா அல்லது பாகிஸ்தான்) காஷ்மீர் சேர்ந்து கொள்ளும் உரிமை, காஷ்மீர் முழுவதுக்குமாக தரப்பட்டதே அன்றி, துண்டு துண்டாக இருக்கும் காஷ்மீரின் பகுதிகளுக்கு அல்ல;

"கடந்த சிலகாலமாக, காஷ்மீரில் ஆளும் கட்சியினர், 'காஷ்மீர் இந்தியாவுடன்தான் சேருமென்ற அரசியல் நிர்ணய சபையின் முடிவு இறுதியானது—மாற்ற முடியாதது' என்றெல்லாம், கூரை மீதேறிக் கூவி வருகின்றனர்;

"இந்தக் கருத்து உறுதியற்றது—சர்வதேச மரபுக்கு மாறுபட்டது—மக்களுக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகமானது என்று, நாங்கள் அறைகூவிச் சொல்லுகிறோம்"

—என்று, சிறைப்பட்டிருக்கும் ஷேக் அப்துல்லாவின் சகாக்களான பதின்மூன்று பேர், முன்னாள் ரெவினியூ மந்திரியான மீர்ஜா அப்ஜல் பெக் என்பாரின் தலைமையில் திரண்டு, கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மக்கள் துயர் துடைக்க முன்வாருங்கள்

அவர்கள் அறிக்கையில் மேலும் காணப்படுவதாவது:—

"காஷ்மீர் எந்த நாட்டுடன் இணைவது என்ற பிரச்சினைக்கு முடிவு காண, காஷ்மீர் மக்கள் தங்கள் கருத்தை சுதந்திரமாக—நியாயமாக—பாரபட்சமின்றித் தெரிவிக்க சந்தர்ப்பம் தரப்பட வேண்டும்;

"காஷ்மீரில் உடனடியாக ஒரு சுதந்திரமான தேர்தல் நடத்த பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு பிரதமர்களும், ஐ. நா. பாதுகாப்புக் குழுவும் உதவ முன்வருவதின் மூலம், இலட்சக்கணக்கான காஷ்மீர் மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும்."

இந்த அறிக்கையில், காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் 75 உறுப்பினர்களில் ஏழு பேர்களும், சூபி முகம்மது அக்பர் என்ற ஒரு மக்கள் சபை உறுப்பினரும் கையெழுத்திட்டிருக்கின்றனராம்.

உடனடியாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோருவதற்காக ஒரு முன்னணியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—8—'55 வியாழன்

தண்டச் செலவு!

சென்னை கவர்னர் பெருமானுக்குத் தரப்படும் சம்பளத் தொகை இந்த மாநிலத்தின் பொருளாதார நிலைக்கு ஒத்ததாயிருக்கவில்லை. பற்றுக்குறை 'பட்ஜெட்' தயாரிப்பது தவிர்க்க முடியாததாகி, பற்றுக் குறைகளைச் சரிக்கட்ட மேலும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்து நிரப்பவேண்டிய அவல நிலையிலிருக்கும் சென்னை சர்க்காரின் 'கஜானா'விலிருந்து ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாயை கவர்னருக்குச் சம்பளமெனக் கொட்டிக் கொடுப்பது அநியாயமானது என்ற கருத்து பரவலாக நாட்டில் நிலவி வருகிறது.

தங்களின் வரிப்பணத்தில், கணிசமான அளவு பெரியதொரு தொகை தனி நபர் ஒருவருக்குத் தரப்படும் கொடுமையினை, ஏற்கனவே சென்னை மக்கள் உணரத்தலைப்பட்டிருக்கின்றனர்!

நாட்டில் அமுல் செய்யப் படுவதாகக் கூறப்படும் ஜனநாயக ஆட்சிமுறைக்கு முரணாக, கவர்னர் பதவி விளங்குகிறது.

வெள்ளையர் ஆட்சி காலத்தைப்போன்றே, கவர்னர், மத்திய ஆட்சியினரால் நியமிக்கப் பட்டவர். அவருக்கும், மக்களுக்கும் தொடர்பு இல்லை—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லர் கவர்னர்; அப்படிப்பட்டவரிடம்தான், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைகிற ஒரு சட்ட மன்றத்தின் நடவடிக்கைகள் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளடங்கிய ஒரு சட்ட மன்றம் ...

...ரால் நியமிக்கப்படுபவர்; அவ்வாறிருக்க அவருக்கு மாநில சர்க்கார் சம்பளம் தரவேண்டுமென்பது என்ன நியாயம்?"—என்று வடநாட்டு மாநிலங்கள் இரண்டொன்றில் குரல் எழுப்பப்படுகிறது.

இந்தக் குரல் கேட்டதும் அதுபற்றிக் கூட, சென்னை மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான்—'நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இவ்வளவு பெரிய தொகை கவர்னருக்குத் தரப்படுவது அநியாயம்,' என்ற உணர்வு, வேகமாகப் பரவிவரும் நேரத்தில்தான், கவர்னர் தனது சம்பளத்தினை, தண்டமாகச் செலவிடும் முறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சம்பவம் ஒன்று பற்றி, சட்ட சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"கடந்த 1954 டிசம்பரில் லட்சத் தீவுகளுக்கு சென்னை கவர்னர் பிரகாசா சென்று வந்ததற்கு ரூ. 44,016-3-0 செலவாயிற்று,"

என்று மந்திரி பரமேஸ்வரன் கேள்வி ஒன்றுக்குப் பதில் தருகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கவர்னர் லட்சத் தீவுகளுக்குச் சென்று வந்தார்; செலவு ரூ. 44,000; ஆனால் பலன்?

லட்சத் தீவுகளுக்கு, தன்னுடைய 'ரத கஜ துரக பதாதி' படைகளுடன் சென்று ரூ. 44,000-த்திற்கு கவர்னர் செலவு கணக்குத் தந்திருப்பதினால், சென்னை மக்கள் பெற்ற பலன் என்ன?

ரூ. 44,000 பாழாக்கப்பட்டிருக்கிறது—பலனற்ற ஒரு பயணத்திற்காக!

'இந்தத் தொகையைக் கொண்டு இங்கிருந்த ...

...டங்கள், மத்திய சர்க்காரால் நியமனம் பெற்ற கவர்னரின் ஒப்புதல் முத்திரையைப் பெற்றுல்தான் உயிர்பெற முடியும் என்ற முறை—விதி, எந்த நாட்டின் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு ஒத்ததோ, நாமறியோம்!

இந்த அலங்கோல முறைப்படி மத்திய சர்க்காரின் ஆதிக்கச் சின்னமாக சென்னையில் வீற்றிருக்கும் கவர்னருக்கு, மக்கள் வரிப் பணத்திலிருந்து பத்து இலட்சம் ரூபாய் கொட்டித்தரப்படுவது, 'குதிரை கீழேயும் தள்ளி, குழியும் பறித்ததாம்' என்ற பழமொழியைத்தான் நினைவூட்டுவதாயிருக்கிறது.

டெல்லியால் நியமிக்கப்படும் ஒரு நபரை, 'கவர்னர்' என்று ஒரு மாநில மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதே பெரியதொரு கொடுமை! அந்தக் கொடுமையின் அளவு இரட்டிப்பாகிறது—அவருக்கு, அந்த மாநிலத்தின் சக்திக்கு மீறிய அளவு சம்பளம் தரப்படும் போது!

அந்தக் கொடுமை, மேலும் அதிகமாகிறது—தனக்குத் தரப்படும் சம்பளத் தொகையை, கவர்னர் செலவிடும் முறையால்!

"கவர்னர் மத்திய சர்க்கா...

...மாநிலத்தின் ஒரு பகுதியாம்; அந்தப் பகுதியைக் கவர்னர் பார்வையிட வேண்டி, அத்தனை பணம் பாழடிக்கப்பட்டிருப்பதாக மந்திரி கூறியிருக்கிறார்.

கவர்னர், தனக்குத் தரப்படும் பெரும் சம்பளத் தொகையைச் செலவு செய்ய என்ன என்ன வழி என்று தேடுவதைத்தான், வேலையாகக்கொண்டிருக்கிறார் என்றே தெரிகிறது.

அவரே ஒரு முறை குறிப்பிட்டாரே—'கவர்னர் பதவியிலிருப்போருக்கு ஒருபோலீஸ்காரருக்கு இருக்கும் அளவு வேலை கூட இல்லை,' என்று!

இப்படி வேலையேதும் அற்றிருக்கும் ஒருவர், தனக்கு அளவுக்கு அதிகமான தொகை சம்பளமாகக் கிடைக்கும் போது, அதனை லட்சத் தீவுகளைப் பார்வையிடவும், 'ராஜ பவன'த்தை லட்சம் தீபாலங்காரம் செய்துபார்க்கவும், விருந்தும் வேடிக்கையும், இசையும் நடனமும் நடத்தவும பாழடித்துக் கொண்டிருப்பதில் ஆச்சரியமேதுமில்லைதான்!

இப்படி, கவர்னர் செய்யும் 'தண்டச் செலவு'களை நிறுத்தி, அவருக்குத் தரப்படும் சம்பளத்தினைக் குறைக்க வேண்டுமென்று, மக்கள் கோருவது எந்த வகையில் தவறுடையது என்பதை சர்க்காரும் ஏனையோரும் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

கடனுக்கு 'பட்டை நாமம்' போட!

ஒரிசா சர்க்காருக்கு எம்.எல்.ஏ. யோசனை

புவனேஸ்வர், ஆக 10—

ஹிராகுட் அணைக்கட்டு திட்டத்திற்கென ஒரிசா மாநில சர்க்காருக்கு, மத்திய சர்க்கார் தந்திருக்கிற ரூ. 100 கோடி கடனைத் திருப்பித் தராது 'நாமம்' போட்டு விட வேண்டும் என சட்டசபை உறுப்பினர் ஒருவர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

கல்ஹாந்தி மகாராஜா என்ற அந்த உறுப்பினர், "ஒரிசா ஏற்கனவே உணவு உபரியாகவுள்ள மாநிலம்; இந்தியா முழுவதின் ...

...ரம் மைல் தொலைவில் உள்ள லண்டன் நகருக்கு எட்டு பேர்கள் 'சூபர் கான்ஸ்டலேஷன்' விமானம் மூலம் சென்று திரும்பி விடலாம்,' என்று பணக்காரர்கள் போக்கில் கணக்கிடலாம்!

விவசாயத் தொழில் புரியும் குடும்பம் ஒன்றின் சராசரி வருமானம், தென்னாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 382;—மறந்துவிடக்கூடாது — குடும்பம் ஒன்றின் ஆண்டு வருமானம் சராசரி ரூ. 382. கவர்னர், இப்படிப்பட்ட குடும்பங்களிடமிருந்து பெறப்படும் வரித்தொகையிலிருந்து, லட்சத் தீவுகளைப் பார்வையிட்டு வர, ரூ. 44,000 பாழ் செய்திருக்கிறார்!

இந்தத் தொகை, சுமார் 115 விவசாயக் குடும்பங்களின் ஒரு ஆண்டு வருமானத்திற்குச் சமமானதாக அமைகிறது!

115 குடும்பங்கள் ஓராண்டில் உழைத்துச் சம்பாதிக்கும் தொகையை, ஒரு தனி மனிதர், ஒரு தீவினைப் பார்வையிட்டு வருவதற்காகப் பாழடித்திருக்கிறார். என்னே, காந்திய வாழ்க்கை! என்னே, 'சோஷலிச மாதிரி சமூக அமைப்புப் பாதை' வழி நடப்போர் செயல்!

லட்சத் தீவுகள், சென்னை ...

10 லட்சம் ஏகருக்கு பாசனவசதி தரும் துர்காபூர் அணைக்கட்டு

துணைத்தலைவர் திறந்துவைக்கிறார்

கல்கத்தா, ஆக. 10—

துர்காபூரில், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட கார்ப்பரேஷனால் கட்டி முடிக்கப்பட்ட அணைக்கட்டை உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் திறந்து வைத்திருக்கிறார்.

இந்த அணைக்கட்டுத் திட்டத்தால், மேற்கு வங்க மாநிலத்தில் சுமார் 10,00,000 ஏகர் தரிசு நிலங்களுக்கு இனிமேல் நீர்ப்பாசன வசதி கிடைக்குமென கூறப்பட்டிருக்கிறது.

2,271 அடி நீளத்தில் கட்டப்பட்ட இந்த அணைக்கட்டுதான் இந்தியாவிலேயே மிக நீளமான அணைக்கட்டாம். மேலும் இது, 2,200 சதுர மைல்களைச் சுற்றிலும் கட்டப்பட்டுள்ளதென்றும், சுமார் 1,500 மைல் தொலைவுக்குக் கால்வாய்கள்கொண்ட ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அணைக்கட்டின் இடது புறத்தில் உள்ள முக்கிய கால்வாய், அங்கிருந்து 35 கல் தூரத்திற்கு வடக்கிலுள்ள கல்கத்தாவில் பாயும் ஹூக்ளி நதியுடன் கலக்கும் என்றும், இக்கால்வாய் கல்கத்தா, துர்காபூர் திட்டப் பகுதி ஆகியவற்றிடையே சிறு கப்பல் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் என்றும், அத்துடன், இக்கால்வாயின் முக்கியத்துவம்—கல்கத்தாவிலுள்ள தொழில் பிரதேசங்களையும், நிலக்கரி வயல்களையும் ஒன்று சேர்ப்பதில் அமைகிறது என்றும் கூறப்படுகிறது.

புதிய தாமோதர் திட்டக் கால்வாய்களின் மூலம் 8,00,000 ஏகருக்கு மேற்பட்ட நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சுமார் 2,00,000 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி தரும் தற்போதைய தாமோதர், ஈடன் கால்வாய்கள், இப்போது துவங்கப்பட்டபுதிய துர்காபூர் கால்வாய் திட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கும் என்றும் தெரிகிறது.

இது குறித்து, நிபுணர் குழு ஒன்று சமர்ப்பித்துள்ள சிபாரிசுகளை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும் அறியக்கிடக்கிறது.

ஹௌரா, ஹூக்ளி, மேற்கு வங்கத்திலுள்ள பர்த்வான் ஆகிய மாவட்டங்களில், மொத்தம் சுமார் 450 சதுர மைல்களுக்கு அதிகமாக சாக்கடை வெளியேற்றும் திட்டமும், இந்தப் புதிய திட்டங்களுள் மற்றொரு முக்கியமான ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிம்பிரி மருந்து உற்பத்திசாலை

எல்லா ரக பெனிசிலினையும் உற்பத்தி செய்யுமாம்

புதுடில்லி, ஆக. 9—

புனாவிற்கு அருகில் பிம்பிரி எனுமிடத்தில் உள்ள மாநில சர்க் ...

...ளிப்பதற்காகவே, ஹிராகுட் அணையைக் கட்டி, ஒரிசா பிராணத் தியாகம் செய்கிறது. ஆகவே இதற்கென வாங்கியுள்ள ரூ. 100 கோடி கடனைத் திருப்பித்தரத் தேவை இல்லை," என்று சட்டசபையில் கூறியிருக்கிறாராம்!

குடியிருப்போருக்குப் பாதுகாப்பு

திடீரென வெளியேற்றுவதை தடுப்பதற்கு மசோதா

சென்னை நகர குடியிருப்போர் பாதுகாப்பு சட்டத்தை, இதர முனிசிபல் நகரங்களுக்கும் பரவலாக்க சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கும் திருத்த மசோதாவை, சென்னை சட்டசபையில் அமைச்சர் மாணிக்கவேலர் பிரரேபித்துக் கூறினார்:—

"முன்பு பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, இம்மசோதா கொண்டுவரப்படுகிறது; குடியிருப்போர் பலர், அநியாயமாக வெளியேற்றப்படுவதாக மதுரை, திருச்சி நகரங்களிலிருந்து புகார்கள் வந்துள்ளன; ஆகவே தான் சட்டத்தைப் பரவலாக்க சர்க்கார் தீர்மானித்தது; ஆகவே, மசோதாவை தனிக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதென்ற பிரரேபணையை நான் ஏற்கிறேன்," என்றார்.

பலர் பேசிய பின், மசோதாவை, தனிக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்ற பிரரேபணையை சர்க்கார் ஏற்றது.

ரஷ்யா செல்கின்றனர்!

சோவியத் வர்த்தக சங்கத்தின் மத்தியக் குழு விடுத்த அழைப்பிற் ...

...லின் மருந்து உற்பத்திச்சாலையில், நாட்டில் உள்ள மருத்துவமனைகள், மருத்துவர்கள் ஆகிய அனைவருக்கும் தேவையான எல்லா ரகப் பெனிசிலின் மருந்துகளும் உற்பத்தி செய்யப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தி திணிக்கப்பட்டுள்ள அளவு!

டெல்லியில் காட்சிசாலை திறக்கப்படுகிறது

இந்தியா குடியரசு நாடான பின்னர், இந்தியா முழுமையிலும்—குறிப்பாக இந்தி மொழி பேசப்படாத பிரதேசங்களில் இந்தி மொழியைப் பரவச் செய்வதில் சர்க்கார் அடைந்துள்ள அபிவிருத்திகளையெல்லாம் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கென இந்தி மொழிப் புத்தகங்கள், பூகோளப் படங்கள், குறிப்புகள் போன்றவை அடங்கிய அகில-இந்திய இந்தி மொழி கண்காட்சி ஒன்றை, வருகிற 12-ந் தேதியன்று புதுடில்லியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

இந்தி மொழியைப் பரவச் செய்வதிலும், அபிவிருத்தி அடையச் செய்வதிலும், மத்திய, மாநில சர்க்கார்கள் தேவையான அளவிற்கு வேலை செய்துள்ளனராம். இந்த வேலைகளில் பெரும்பான்மையானவை, பொதுமக்கள் கவனத்திற்குத் தெரியாத முறையில் மிக அமைதியாக நடைபெற்றுள்ளனவாம்.

நாட்டின் நிலையில், இந்தி மொழி எந்த அளவு 'தனக்குரிய' இடத்தை அடையச் செய்ததிலும், இனி மேலும் அடையச் செய்வதற்குமாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன—வந்துள்ளன என்பதை இந்தக் கண்காட்சி ஓரளவுக்குப் புலப்படுத்துமாம்!

விசேட கலை நிபுணர் குழு ஒன்றினால் பொறுக்கி எடுக்கப்பட்ட சுமார் 4,000 நவீன இந்தி கலாச்சாரப் பகுதிகள் இக்கண்காட்சியில் இடம் பெறும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், நாட்டிலுள்ள முக்கியமான இந்தி பிரசுரகர்த்தாக்கள் அனைவரும், இக்கண்காட்சியில் வைப்பதற்கென தங்களால் வெளியிடப்பெற்ற புத்தகங்கள் பலவற்றை அனுப்பியுள்ளனராம்.

மேற்படி கண்காட்சி இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரரால் திறந்துவைக்கப்பட இருக்கிறதாம்.

...தலைவரான ஜி. ...கர், சோவியத் ரஷ்யா ...செல்ல இருப்பதாகவும், ...ர காலம் தங்கி சுற்றுப் ...செய்வார் எனவும் தெரி...

...பிரதமரும் செல்கிறார்

...பிரதமர் கர்னல் நாச...க்கு ரஷ்யா சர்க்கார் ... அழைப்பை ஏற்றுக் ...ரஷ்யா செல்ல இருப்ப...தெரிய வருகிறது.

...'க்குப் பரிசு!

...பரிசு' முறையில், ...டாலர் கொண்ட நிதி ...மெரிக்க 'போர்டு' கம்...க்கியுள்ளது. இந்நிதியி... ஒவ்வொரு ஆண்டும், ...லைக்கு அணுசக்தியைப் ...துவதற்கு சிறப்புமிக்க ...செய்யும் விஞ்ஞானிக்கு ...ாலரும், ஒரு விசேட ...வழங்கப்படுமாம்!

...யரை அடக்க ...ப் போலீஸ்!

...பிரதேசம், விந்தியப் ... உத்திர பிரதேசம் ...லங்களின் எல்லைகளில், ...ர்களின் அட்டகாசத்தை ...ரவிலேயே அம்மூன்று ...யும் சேர்ந்த கூட்டுப் ... அமைப்பு ஒன்று ஏற்...ம் என அறிவிக்கப்பட்...

...டி. அம்பே... விற்கு ... அங்கு 3 ... பயணம் ... கிறது.

எகிப்து ...

எகிப்து ... ரும், ... விடுத்த ... கொண்டு ... தாகவும் ...

'சேவை...

'கோப... 10 லட்சம் ... ஒன்றை, ... பெனி ஒது... விருந்து ... ஆக்க வே... பயன்படுத்... சேவை ... 75,000 ... பதக்கமும் ...

...கொள்ளை... கூட்...

மத்திய ... பிரதேசம், ... ஆகிய மாநி... கொள்ளைய... ஒடுக்க, வி... மாநிலக்கை... போலீஸ் ... படுத்தப்பட... டிக்கிறது...

‘திராவிட நாடு கோரிக்கை கவர்னர் உரையில் ஏன் இடம் பெறவில்லை?’

‘தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது இப்போதேனும் தெரிகிறதா?’

சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி முழக்கம்

“கவர்னருடைய பிரசங்கம் வழக்கம்போல் நமக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது; தென்னாட்டில் திராவிட நாடு அமைப்பு, மொழிவாரியாக மாநிலத்தைப் பிரித்ததால் ஏற்பட்டிருக்கும் எல்லை தகராறு, தென்னாட்டில் இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணித்து வருவதை எதிர்த்து ஏற்பட்டுள்ள கிளர்ச்சி ஆகிய பிரச்சினைகள் பற்றி குறிப்பிடாமலிருப்பது ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தருகிறது;

“‘இந்தியைக் கட்டாய மொழியாக ஆக்கமாட்டோம்’—என்று, குடியரசுத் தலைவரிலிருந்து, காமராசர் வரையிலும் கூறி வந்தாலும்கூட, இரயில்வே நிலையங்களிலும், அஞ்சல் நிலைய கார்டுகளிலும், மணியார்டர் ஏடுகளிலும் இந்தி வலுக்கட்டாயமாக புகுத்தப்பட்டுள்ளது; மேலும், நாணயங்களில்கூட இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது; இது கண்டிக்கத் தகுந்ததாகும். இந்தி வேண்டாமென்று இம்மாநில மக்கள் பலமுறை எதிர்ப்பு காண்பித்தும் கூட அது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதை நாம் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை.”

—என்று, 4—8—55-ல், சென்னை சட்டசபையில் கவர்னர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ., அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார் :—

“ஆந்திரரும்—தமிழரும் பிரிந்ததால் ஏற்பட்டிருக்கும் எல்லைத் தகராறுக்கு, 1951-ம் ஆண்டு ‘சென்சஸ்’ அடிப்படையில் பரிகாரம் தேடிக் கொள்ளலாமென்று கவர்னர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்; 1951-ம் ஆண்டு ‘சென்சஸ்’ கணக்கு எடுத்தவர்கள் பூராவும் ஆந்திரர்கள்; அவர்கள், தமிழர்களைக் கூட ஆந்திரர்கள் என்று எழுதி வைத்திருக்கிறார்களாம்! அந்தக் கணக்கு நமக்கு உதவாது என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். ‘திருத்தணித் தளபதி’ (!) என்று அழைக்கப்படுகிற திரு. விநாயகத்தைக் கூட, ‘அவர் ஒரு தெலுங்கர்’ என்றுதான், ஆந்திரர்கள் எழுதிவைத்திருக்கிறார்களாம்!

‘ஆந்திரரும் தமிழரை வெறுக்கின்ற இந்த நேரத்தில், அம்மக்களின் செய்கையையும், மொழியையும் அடிப்படையாகக் கொண்டு அந்த மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமுள்ள தலைவர்களையும் கலந்து கொண்டு, சென்னை சர்க்கார் அமைச்சர் சுப்பிரமணியம் ஆந்திர சர்க்காருடன் வாதாடி ஆவன செய்ய வேண்டும்; அப்படி இல்லாமல் இரண்டு சர்க்கார்கள் மட்டும் சேர்ந்து பேச வேண்டுமென்று சொன்னால், அதனால் எவ்வித பலனுமிராது—இந்த நிலைமையைக் கண்டு மக்கள் பயப்படுகிறார்கள்; ஏனென்றால், ‘இரண்டு அரசாங்கமும் காங்கிரஸ் அரசாங்கமே, ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்கக்கூடிய மனப்பான்மை வந்தே தீரும்—அப்போது சென்னை நிதி மந்திரியும் பணிந்துவிடுவாரோ?’—என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதால்தான் எனவேஎல்லைப்பிரதேசத்தில் இருக்கிறவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதைச் செய்ய வேண்டுமென்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுகின்றேன்.

“சபாநாயகர் திரு. சிவஷண்முகம் அவர்கள், உயர்ந்த பதவிக்கு போவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், ‘அவருடைய இடத்திற்குத் தகுதியான ஒருவர் கிடைப்பாரா?’ என்ற அச்சமிருக்கிறது; அவருடைய பிரிவு நமக்கு வருத்தத்தைத்தான் அளிக்கிறது.

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வருகிறதென்றும், அதனால் மக்களுக்கு சுபீட்சம் ஏற்படும் என்றும் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். ‘முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது,’ என்பதை நாம் வலியுறுத்திக் கூறுகிறோம். ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாக வடநாட்டின் வளம் பெருகுகிறதே ஒழிய, தென்னாடு புறக்கணிக்கப்பட்டுமே விட்டது.

“அண்மையில், ஆவடியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில்கூட, வரவேற்புக் குழு தலைவராயிருந்த திருமதி அம்புஜம்மாள், ‘தென்னாடு கவனிக்கப்படவில்லை; அதற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டும்’ என்று வலியுறுத்திக் கூறினார்; நிதி அமைச்சர் சுப்பிரமணியமும்கூட, ‘மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணத்தைப் பிரிக்க வேண்டு’மென்று பேசியிருக்கிறார். அந்த அளவுக்குத் தைரியம் நிதி அமைச்சருக்கு எப்படி ஏற்பட்டது என்பது ஆச்சரியமாகத்தானிருக்கிறது!

“தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது,’ என்ற உணர்ச்சி, இப்பொழுதாவது அவருக்கு ஏற்பட்டிருக்கிறதைக் கண்டு மகிழ்கிறேன்.

“இந்தச் சந்தர்ப்பத்தில், நிதி அமைச்சருடைய கோரிக்கை ஓரளவுதான் உண்மை; மக்கள் தொகையின் அடிப்படையில் பணத்தைப் பிரிக்க வேண்டுமென்றால், எந்த இடத்தில் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறதோ, அங்குதான் மக்கள் தொகை நிறைய இருக்கும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தொழில் வளர்ச்சிக்கும், நீர்ப்பாசனத்திற்கும், வடநாட்டில் பணம் அதிகம் செலவழிக்கப்பட்டது. இப்பொழுது வடநாட்டில் மக்கள் தொகை பெருகியிருக்கலாம்; எனவே, தொழிற்சாலை இல்லாத இடத்தில் தொழிற்சாலை ஏற்படுத்த முக்கியத்துவம் கொடுக்க, இம்மாநில நிதி அமைச்சர் நம்முடைய பிரதிநிதியாக இருந்து வாதாட வேண்டும்; அவருடைய நிலைமையைப் பொறுத்தவரையில், சூட்சுமமாகவே அவர் பேசுகிறார். நாங்கள் சொல்லுகின்றது போல், அவரும் ‘தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது’ என்று சொன்னால், ‘எதிர்க்கட்சிக்குப் போகிற நிலைமை வளர்ந்து கொண்டு வருகின்றதோ,’ என்று, மற்றவர் எண்ணக்கூடுமென்ற கண்ணோட்டத்துடன்தான், அவர் ‘மக்கள் தொகையின் அடிப்படையில் பணத்தைப் பிரிக்கவேண்டு’மென்று கூறியிருக்கிறார். சென்னை தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணனும் கூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். ஆனால், ‘மக்கள் தொகையை மட்டும் பார்த்தால் போதாது; எந்தெந்தப் பிராந்தியங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனவோ—பின் தங்கியிருக்கின்றனவோ, அவற்றின் மீது அதிகக் கவனம் செலுத்த வேண்டும்’—என்று அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

“ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, ஆவடி காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு ‘வெளிச்சம்’ காட்டப்பட்டது; அதுதான் ‘சோஷலிச வெளிச்சம்’; கவர்னர் கூட நம் நாட்டில், ‘சோஷலிசமாதிரி சமூக’த்தை நிறுவவேண்டும்” என்றும் கூறியிருக்கிறார்கள். அந்த ‘மாதிரி’யை எடுத்துவிட்டு ‘உண்மை’யான சோஷலிசத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

“இப்பொழுது வடநாட்டாரின் கண்ணில் வெண்ணெயையும், தென்னாட்டாரின் கண்ணில் சுண்ணாம்பையும் தடவிய நிலைமை இருக்கிறது. உண்மையான ‘சோஷலிச’த்தை நாங்கள் வரவேற்கிறோம்; ஆனால் ‘சோஷலிச மாதிரி சமூகம்’ என்ற வார்த்தை, மக்களை ஏமாற்றவே உபயோகப்படுகிறதேயொழிய அதில் உண்மையான நிலைமை ஒன்றுமில்லை; தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு இதைத் தவிர வேறு ஆதாரம் தேவையில்லை.

“நெய்வேலியைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு போதுமானதல்ல; ஒரு ஏக்கருக்கு ரூ. 250 நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது; குறைந்தது ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்பது எங்கள் கோரிக்கையாகும்.

“தென்னாட்டில், சேலத்தில் இரும்பு கிடைக்கிறது; நெய்வேலியில் நிலக்கரி கிடைக்கிறது. நிலக்கரியை வைத்துக்கொண்டு இரும்புத் தொழிற்சாலையை ஏன் ஏற்படுத்தக் கூடாதென்று கேட்க விரும்புகிறேன். நெய்வேலி திட்டத்தைப் பரீட்சார்த்தமாக வைத்துக்கொண்டு, ‘வெற்றி பெற முடியுமா’ என்ற ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது, ‘மக்களுடைய பணம் பாழாகிக் கொண்டிருக்கிறது,’ என்பதைத் தவிர வேறு என்ன பலன் அதிலிருக்க முடியும்? இரும்பை வெட்டியெடுத்து உபயோகப்படுத்தலாமா?—கூடாதா? என்பதைப்பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் இதுவரையில் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் ஊழியர்களுக்கு வீட்டு வசதியளிக்க ஏற்பாடு செய்யவில்லை; ரூ. 5,000-கோடி செலவழிக்கும் சமயத்தில், அரசாங்க அலுவல்களுக்கு ஆணிவேர்போல் இருப்பவர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க சர்க்கார் ஏன் திட்டமிட்டிருக்கக் கூடாது? யார் யாருக்கு வீடு இருக்கிறதோ, அவர்களுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாகவும், கடன் கொடுப்பதன் மூலமாகவும் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள்; ஏழை சிப்பந்திகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

“வெட்பதட்ப நிலைசரியாகஇருப்பதாகவும், மழையால் குளம், குட்டைகள் நிரம்பியிருப்பதாகவும் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். இதைப்பற்றி யோசிக்கும்பொழுது ஒரு பழங்கால அரசருடைய கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு அரசர் மந்திரியைப் பார்த்து, ‘மந்திரியாரே, நாட்டில் மழை பெய்கிறதா?’ என்று கேட்பதற்கு, மந்திரி ‘ஆம் அரசே; மாதம் மும்மாரி பெய்திருக்கிறது,’ என்று பதில் உரைத்தாராம். அது போன்று, கவர்னரிடத்தில், சமது மந்திரிகள், அம்மாதிரி சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை; அதை வைத்துக் கொண்டு ‘மழை பெய்திருக்கிறது’—என்று கூறியிருக்கிறார்! என்னுடைய தொகுதியிலுள்ள குளம், குட்டைகளில் தண்ணீர் இல்லை; விவசாயிகள் வேண்டிய தண்ணீரில்லாமல் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; ‘இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இதற்கு வழிகோலப்படும்,’ என்று ஆட்சியிலுள்ளவர்கள் சொன்னார்கள்; ஆனால், எப்பொழுது வழி செய்யப் போகிறார்களோ, தெரியவில்லை!

“கடன் கொடுக்கின்றவர்கள் விஷயமாக ஒரு சட்டம் வரப்போகிறதென்று அரசாங்கத்தார் சொன்னார்கள்; இங்கு, 6 மாதக் கடன் கொடுப்பவர்கள் வடநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள்தான்; அவர்கள், தென்னாட்டில் நுழையாதபடி ‘அனுமதிச் சீட்டு’ வாங்கிக்கொண்டுதான் வரவேண்டும்—என்று ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்; அந்த மார்வாரிகள், தங்கள் கணக்குகளைத் தமிழில் எழுதும்படியும் அதற்கு குமாஸ்தாக்களை வைத்துக்கொள்ளும்படியும் செய்ய வேண்டும்; நகையை அடகு வைத்துக் கடன் வாங்கினால் அந்த மார்வாரிகள் என்ன எழுதுகிறார்கள் என்றே தெரிவதில்லை; இதனால், வட்டிக்கு வட்டி வாங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது; எனவே, வடநாட்டுக்காரர்கள் தென்னாட்டில் கால் வைக்காதபடி செய்தால் நலமாக இருக்கும். பல் முதலாளிகளின் ‘பஸ் உரிமைச் சீட்டு’ எல்லாம் ‘சேட்’களின் கையில்தான் இருக்கிறது; இந்த நிலைமை மாறுவதற்கு ‘விதி’கள் வகுக்கப்பட வேண்டும்; இதைச் செய்தால்தான் கொண்டு வரப்படும் சட்டம், பலன்தரும் உண்மையான சட்டமாக இருக்க முடியும்.”

30,000 பேல் இந்தியக் கச்சாப் பருத்தி

சைனாவுக்கு அனுப்ப ‘லைசென்ஸ்’ வழங்கமுடிவு

பம்பாய், ஆக. 8—

30,000 பேல் இந்தியக் கச்சாப் பருத்தியை சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய லைசென்ஸ் வழங்குவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

400 ராத்தல்களடங்கிய ஒரு பேல் கச்சாப் பருத்திக்கு ரூ. 125 வீதம் ஏற்றுமதி வரி விதிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வனிதையரை வட்டமிடும் வாலிபர்கள்

பம்பாய் போலீசாரால் வளைக்கப்படுகின்றனர்

பம்பாய், ஆக. 9—

தெருக்களில் நடைபெறும் ‘அசம்பாவித’ நிகழ்ச்சிகளைக்கட்டுப்படுத்த பம்பாயிலுள்ள முக்கிய வீதிகள், கடற்கரை, பொதுப் பூங்காக்கள் ஆகியவற்றில் போலீஸ் கண்காணிப்புகள் இருந்துவருகின்றன என்று கூறப்படுகிறது!

நகரில், பெண்களுக்குத் தொல்லைகள் ஏற்படாமல் அவர்களைக் ‘காப்பாற்று’வதற்காக, போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, நகரில், சுமார் 60 இளைஞர்களுக்குமேல் கடந்த பதினைந்து நாட்களுக்குள் கைது செய்யப்பட்டு, பின்னர் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனராம்.

குற்றம் செய்த மேற்படி இளைஞர்களில் பெரும்பான்மையினர் கல்லூரி மாணவர்கள் என்றும், அவர்கள், தெருக்களில் நடந்து செல்லுங்காலை, பெண்களைப் பார்த்து விசில் அடித்தும், கண்சாடை செய்தும் அவர்களுக்குத் துன்பம் விளைவித்தனராம்.

பெண்களுடன் தவறான முறையில் நடந்துகொண்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட சிலர் தண்டனையும் விதிக்கப் பெற்றுள்ளனராம்.

அசாம் மாநிலம் முதலிடம் பெறுகிறது

புதுடில்லி, ஆக. 8—

ஜப்பான் நெல் சாகுபடி முறை, 1954—55-வது ஆண்டில், சென்னை மாநிலத்தில்தான் அதிகமான பரப்பளவுக்குக் கொண்டு வரப்பட்டது என்றும், அம்முறையைக் கையாண்டதில், அசாம் மாநிலத்தில்தான் அதிக அளவிற்கு—அதாவது ஏகர் ஒன்றுக்கு 70 மணங்கு நெல் வீதம் சாகுபடி செய்யப்பட்டதென்றும் மத்திய உணவு, விவசாய இலாகா அமைச்சர் ஏ. பி. ஜெயின் கூறியிருக்கிறார்.

சாகுபடியில், அசாமுக்கு அடுத்தபடியாக, மத்தியப் பிரதேசம் ஏகர் ஒன்றில் 57 மணங்கு நெல் சாகுபடி செய்து இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

யார் நலனுக்கோ?

“பல்வேறு தொழிலுக்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களுக்கு, அயல் நாடுகளையே இந்தியா நம்பியிருக்கக் கூடாது; அந்தச் சாதனங்களை நாமே உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று சென்னை கவர்னர் பிரகாசா, விருந்துபசாரமொன்றில் கூறியுள்ளார்.

புகையிலை மொத்த வியாபாரிகள் பீடித் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தாலும் சரி—இல்லாவிட்டாலும் சரி, அவர்கள் யாவரும் லைசென்ஸ் பெறவேண்டியவர்கள் என்றும், அத்தகைய வியாபாரிகளிடமிருந்து 1953, 1954 ஆண்டுகளில், முறையே மொத்தம் ரூ. 14,10,000-மும், ரூ. 13,47,000-மும் ‘லைசென்ஸ்’ கட்டணமாக வசூலிக்கப்பட்டதாம்.

ரூ. 85 கோடியில் தொழில்மயத் திட்டம்

5 லட்சம் பேருக்கு வேலை வசதிகள் கிடைக்கும்

ஐதராபாத், ஆக. 9—

ஐதராபாத் மாநில சர்க்கார் தயாரித்துள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மாநிலத்தில் தொழில் மயமாக்குவதற்கான ரூ. 85 கோடி பெறுமான திட்டங்கள் இடம் பெற்றுள்ளனவாம்.

தொழில் துறையைப் பொறுத்த மட்டில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டங்களால், மாநிலம் முழுமையிலும் சுமார் 5 லட்சம் பேருக்கு மேலும் வேலை வசதிகள் கிடைக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இத்திட்டங்களின் கீழ், மாநில முழுமையிலும் புதிதாக 13 கனரகத் தொழிற்சாலைகள் கட்டப்படுமாம்; தற்போது இருந்துவருகின்ற 10 தொழிற்சாலைகள் விரிவு படுத்தப்படுமாம்.

உரத் தயாரிப்பு ஆலைகள், நூற்பு ஆலைகள், ஆமணக்கு எண்ணெய் ஆலைகள், சூபர்-பாஸ்பேட் உற்பத்திச்சாலை, டி. டி. டி. உற்பத்திச்சாலை ஆகியவை இந்தத் திட்டங்களில் அடங்கியுள்ள சிலவாம்.

சோளம் செல்லுகிறது!

இந்தியாவிலிருந்து, ஒருவர் உயர்ந்தபட்சம் 500 டன் ஏற்றுமதி செய்யலாம் என்ற அளவில், 30,000 டன் சோளத்தை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்.

சிந்திரி இரசாயன உர உற்பத்திசாலை, 1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில், மொத்தம் 1,54,121 டன் அம்மோனியம் சல்பேட் உரம் உற்பத்தி செய்தது. இந்த உற்பத்தி அளவு முந்திய வருடத்தில் இதற்குச் சரியான காலத்தில் உற்பத்ியானதைக் காட்டிலும் மொத்தம் 29,496 டன் அதிகம் ஆகும்.

பாகிஸ்தான் அரசியலில் திருப்பங்கள்

சௌத்ரி முகம்மது அலி பிரதமர்!

கராச்சி, ஆக. 11—

பாகிஸ்தான் சட்டசபை முஸ்லிம் லீக் கட்சியின் புதிய தலைவரான சௌத்ரி முகமதலியை, புதிய அமைச்சரவை அமைக்குமாறு, பாகிஸ்தான் தற்காலிகக் கவர்னர்-ஜெனரலான மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஜா கேட்டுக்கொண்டுள்ளாராம்.

அமைச்சரவை அமைக்கும்படி அவர் விடுத்த அழைப்பை சௌத்ரி முகமது ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் தெரிகிறது.

இரு கட்சிகளின் கூட்டுச் சர்க்கார் இன்று பதவி ஏற்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

இன்று நடைபெற்ற சட்டசபை முஸ்லிம் லீகின் அவசரக் கூட்டத்தில் தேசிய சர்க்கார் நிறுவ, ஐ. மு., அவாமி லீக் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த கட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அவாமி லீக் மறுப்பு!

நான்கு மணி நேரமாக நடைபெற்ற அவாமி லீக் கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில், பாகிஸ்தான் கூட்டுச் சர்க்காரில் சேர வேண்டாமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். இதனையொட்டி, பாகிஸ்தானில், தேசிய சர்க்கார் ஏற்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகள் அனைத்தும் முறிந்தன என்று தெரிகிறது.

தாம் இனிமேல் மத்திய சர்க்கார் மந்திரியாக இருக்கப் போவதில்லை என்று, சுஹ்ரவர்த்தி, அவாமி லீக் கட்சிக் கூட்டம் முடிவுற்ற பின்னர் கூறியிருக்கிறாராம்

லியாகத் அலிகான் கொலையின் எதிரொலி

விசேட அதிகாரி கண்டுபிடிப்பு: பேகம் லியாகத் அலி நிராகரிப்பு

லியாகத் அலிகான் கொல்லப்பட்டது குறித்து, உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கென, பாகிஸ்தான் சர்க்கார் உள்நாட்டிலாகாவில் விசேட அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த சி. டபிள்யூ. டி. யூரென் என்பார், லியாகத் அலிகான், சையத் அக்பர் என்பவரால் தான் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென்றும், அதுவும், இஸ்லாமிய மதக் கோட்பாட்டிற்கு முரண்பட்டு அவர் நடந்து கொண்டதினால் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே லியாகத் அலிகானை சையத் அக்பர் கொலை செய்திருக்க வேண்டுமென்றும், அவ்வாறில்லாவிட்டால், லியாகத் அலிகான் கொல்லப்படுவதற்கு வேறெவ்வித வழியும் காணப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

ஆனால், இதனை மறுத்து, தற்போது ஹாலந்தில் பாகிஸ்தான் தூதுவராக இருக்கும் லியாகத் அலிகானின் மனைவியான பேகம் லியாகத் அலிகான், அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்:—

"விசேட அதிகாரி, தமது அறிவிப்பில், 'லியாகத் அலிகான் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டு நடந்து கொண்டார்' என்பதற்காக, இஸ்லாமிய மதத்தில் தீவிரப் பற்றுடைய சையது அக்பர், அவரைக் கொலை செய்தார் என்பது வேடிக்கையானது மட்டுமல்லாமல், முற்றிலும் பொய்யான ஒன்று என்று தெளிவாகிறது; இஸ்லாம் மதத்தின்மீது அவன் கொண்டுள்ள தீவிரப் பற்றின் காரணமாக, அம்மதத்திற்கு முரண்பட்டு நடந்ததாக லியாகத் அலிகானை அவன் கொலை செய்தான் என்று கூறுவது, வேடிக்கையாக இருப்பதுடன், இஸ்லாமிய மதத்திற்கே பெரிய அபாண்டம் தேடும் ஒரு பொய்ப் பிரசாரமாகவே இருக்கிறது."

ஜனாதிபதி ஐசனோவரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தூதுவர் குறிப்பிட்டிருக்கிறார் "குருஷ்சேவ், வேடிக்கைக்காக ஜுகாவின் மகளுக்குத் திருமணம் என்று கூறியதாகவும் அதனை உண்மை என்று நினைத்து, ஐசனோவர், திருமணப் பரிசுகள் வாங்கி அளித்ததாகவும், இந்த வேடிக்கையில், ஜுகாவ் அநேகமாக விருப்பமில்லாது கலந்து கொண்டிருக்க வேண்டும் என்றும், தன் மகள் பெயருக்குப் பரிசு தரப்படுவதைப் பெற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி அவருக்கு இல்லாது போயிருக்க வேண்டும் என்றும், இதனால் ஜனாதிபதி ஐசனோவர், 'வேடிக்கையாக ஏமாற்றப்பட்டார்' என்றும் 'டி டெலிகிராப்' தெரிவிக்கிறது.

பாராளுமன்ற — சட்டமன்ற

உறுப்பினர்களுக்கு ...

ஆயுதம் வழங்கும் பிரச்சினை

சென்னை கருத்து பற்றி குறிப்பு

இந்திய ஆயுதச் சட்டம் 1878—பிரிவு 1-க்குச் செய்திருந்த சட்டத் திருத்தப்படி, மாநில சட்டசபைகள், பாராளுமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு, மேற்படி சட்டத்தின்கீழ் ஆயுதங்கள் உபயோகிக்க வழங்கும் லைசென்ஸ் விதியினின்றும் விலக்குத் தரப்படலாம் என்று இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்களைக் கோரியிருந்தது.

இதற்குச் சென்னை மாநில சர்க்கார் மறுப்பு தெரிவித்து இந்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ள பதில் ஒன்றின் நகலை, சென்னை சட்டசபைக் கூட்டத்தின்போது, அமைச்சர் சுப்பிரமணியம் சபையில் வைத்தார்.

"சில குறிப்பிட்ட பிரிவினருக்கு—ஒன்று, அவர்களுடைய யோக்கியதாம்சத்தைப் பொறுத்தோ, அல்லது, சிற்சில பொது வேலைகளில் ஈடுபட்டுள்ளதின் காரணமாக ஆயுதத் தேவைகள் வேண்டியிருப்பதினாலோ— ஏற்கனவே இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது; ஆனால் இந்தக் காரணங்களைக் காட்டி, ஜனநாயக முறையில், மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மேற்கண்ட விதிவிலக்குச் செய்வது வேண்டப்படாதது மட்டுமன்றி, மதிப்பிற்குரியதுமாகாது,"

என்று அந்தப் பதிலில் சென்னை சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் அதில் காணப்படுவதாவது:—

"ஜனநாயக நிலையில் அவர்கள் இருப்பதால், எல்லா ரக மக்களும், அவர்கள் எந்த நேரத்திலும்— எந்த இடத்திலும் தொடர்பு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; அப்படியிருக்க, உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கொண்டவர்களாக இருப்பதனால், ஆயுதங்களை தகாத முறைகளில் அவர்கள் உபயோகிப்பதினின்றும், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு மக்கள் உள்ளாக்கப்பட வேண்டியவர்களாகின்றனர்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், இந்தவகையில் உறுப்பினர்களுக்கு விதிவிலக்குச் செய்யப்படுவதானால், அது அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருப்பதுமட்டுமல்லாமல், அதேபோல, பின்னர், மாவட்டக் கழகங்கள், நகர் மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டிய நிலையும் ஏற்படும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

கழகக் கூட்டம்

★

லால்பேட்டை

சிவன் கோவிலுக்கு அருகில்

13—8—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: லா. ந. இராமலிங்கம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

பொ. சோக்கலிங்கம்

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

★

ஆக. 14 காலை: விருதுநகர்
மாலை: அருப்புக்கோட்டை
15 பண்ணைக்காடு (மதுரை மா.)
16 குசலிங்கம்பாறை (மதுரை மா.)
17 புனல்வாசல் (தஞ்சை மா.)
18 திருமலைராயன்பட்டினம் (தஞ்சை மா.)
19 அரியலூர் (திருச்சி மா.)
21 சென்னை
24 சென்னை

நெல்லையப்பர் உதவி நிதி

★

13—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை-மவுண்ட் ரோடு, மகாஜன சபை மண்டபத்தில், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக, திரு ம. பொ. சிவஞானம் தலைமையில், திரு. பரலி-சு. நெல்லையப்பருக்கு, அமைச்சர் திரு. சண்முக ராஜேசுவர சேதுபதி நிதி முடிப்பு வழங்குவார்.

கி. மனோகரன்,
வி. சண்முகநாதன்

சுற்றுப்பயணம்

ஆக 14 பொள்ளாச்சி
15 ஜல்லிப்பட்டி
16 வேட்டைக்காரன் புதூர்

சென்னை சட்ட சபைத் தலைவருக்குப் பாராட்டு

கட்சி வேறுபாடின்றி பலரும் புகழ்மாலை சூட்டினர்

சென்னை, ஆக. 10—

கடந்த 1946-ம் ஆண்டு முதல் இதுநாள் வரையிலும் சென்னை சட்டசபை சபாநாயகராகப் பணியாற்றிவந்த ஜே. சிவஷண்முகனார் அவர்களின் அரும்பெரும் பணியினையும், திறமையையும் நடுநிலை பிறழா நெறியினையும் பாராட்டி, சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒரு முகமாகப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

மத்திய 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள சிவஷண்முகனார் அவர்கள், தமது, சென்னை சட்டசபை உறுப்பினர், சபாநாயகர் பதவிகளை இத்திங்கள் 16-ந் தேதி முதல் இராஜினாமாச் செய்துவிட்டு, புதிய பதவியை ஏற்றுக்கொள்ள மறுநாளே டில்லி புறப்பட இருக்கிறார்.

★

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம்

சென்னை, ஆக. 11—

நேற்றுடன் முடிவடைந்த சென்னை சட்ட(கீழ்)சபைக் கூட்டம் மீண்டும் இத்திங்கள் 17-ந் தேதியன்று காலை ஆரம்பமாகலாம் எனத் தெரிகிறது.

ஆதாரக் கல்வி, சமூகக் கல்வி, ஆகியவற்றின் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார், 1953—1954-ம் ஆண்டில் மொத்தம் சுமார் ரூ 1,65,00,000-மும், 1954—55ம் ஆண்டில் மொத்தம் சுமார் ரூ. 4,76,00,000-மும் செலவு செய்தனராம்.

அரிசனங்களுக்கு குடியிருப்பு மனைகள்

அமைச்சரின் அறிவிப்பு

சென்னை, ஆக 10—

அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்குவதற்காக தற்போது இருந்துவரும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சென்ற 1953—54-ம் ஆண்டு முடிவு வரையிலும், மொத்தம் 41,641 மனைகள் வழங்கப்பட்டுள்ளனவாம்

நகர் மன்ற, பஞ்சாயத்துக்களின் பகுதிகளில் மனை வாங்க ரூ 70 லட்சம் தேவை என்றும், இது இனிமேல்தான் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், அமைச்சர் பரமேசுவரன், சட்டசபையில் கூறியிருக்கிறார்.

கல்விச் சலுகை மனுக்கள்

எம்.எல்.ஏ.க்கள்கையெழுத்திடும் வரம்பு பற்றி விளக்கம்

சென்னை, ஆக. 10—

சட்டசபை உறுப்பினர்கள், பள்ளிக்கூட சம்பளக் கட்டணச் சலுகைகளுக்கான மனுத் தாள்களில் கையெழுத்திட்டால், அக்கையெழுத்து சரியானதென்று சட்டசபைக் காரியாலயம் குறிப்பெழுத வேண்டிய அவசியம் இல்லை என்றும், மனுக்களில் இடப்பட்டிருக்கும் கையெழுத்து போலிக் கையெழுத்தாயில்லாமல், சட்டசபை உறுப்பினரே கையெழுத்திட்டுள்ளார் என சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் திருப்தி அடைந்தாலும் போதுமானதாகும் என்றும், அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

மனுக்களுக்குக் கையெழுத்திடுவதில் சட்டசபை உறுப்பினர்களுக்கு வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், ஆனால் மாவட்டக் கழகம், நகர மன்றங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கட்கு, இப்பிரச்சினையில், அவரவர் தொகுதியே எல்லையாக வரம்பு கட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்திருக்கிறார்.

மருத்துவக் கல்லூரிக்கு 88 புத்தகம் நன்கொடை!

சென்னைக்கு வழங்கப்படுகிறது

சென்னை, ஆக. 1—

மூளை நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் பிரசித்தி பெற்ற அமெரிக்க இரண சிகிச்சை நிபுணர் டாக்டர் வால்ட்டர் ப்ரீமன், சென்னை மருத்துவக் கல்லூரி நூல் நிலையத்துக்கு 88 புத்தகங்களை நன்கொடையாக அனுப்பியுள்ளார். 120 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இக்கல்லூரி நூல் நிலையத்தில் ஏற்கனவே 22,000 புத்தகங்கள் இருக்கின்றன இன்று மாலை 4 மணிக்கு, அமெரிக்க செய்தி இலாகா பொது விவகார அதிகாரி அப்புத்தகங்களை கல்லூரிக்கு வழங்குவார்.

நில வரி மீது உபரி வரி

சென்னை, ஆக. 10—

நிலவரிமீது உபரி 'சர்சார்ஜ்' விதிக்கின்ற மசோதா, சென்னை சர்க்கார் அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நிலவரியில், ஒவ்வொரு பசலியிலும் ஒவ்வொரு ரூபாய்க்கும் இரண்டணா வீதம் இந்த சர்சார்ஜ் விதிக்கப்படுமாம் ஏகருக்கு, ரூ - 10-க்கு மேல் நீர்க்கூலி செலுத்தப்பட்டால், அந்தவாறு ரூ. 10-க்கு அதிகமாகச் செலுத்தும் பணத்தை இந்த சர்சார்ஜ் விதிப்புக் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியாது.

கிராமப் போக்குவரத்து வசதிகளைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதுடன், மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்க தல நிறுவனங்களுக்கு உதவி செய்யவே இந்த 'சர்சார்ஜ்' விதிக்கப்பட்டுள்ளதாம்.

அயல் நாட்டு நிபுணர்கள்

இந்தியா வருகின்றனர்

சிறு கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவிபுரிவராம்!

புதுடில்லி, ஆக 10—

சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறிய கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக உதவி புரிய, அயல்நாடுகளைச் சேர்ந்த 6 நிபுணர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதென மத்திய கைத்தொழில் அமைச்சர் கனுங்கோ கூறியிருக்கிறார்.

அந்த 6 நிபுணர்களும், மேற்கு ஜெர்மன், டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்து அழைக்கப்படுவர் என்றும், அனேகமாக அவர்கள் அனைவரும் வருகிற செப்டம்பர் திங்களிலேயே இந்தியாவந்துவிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2,000 முதல் ரூ. 3,000 வரை ஊதியம் தரப்படலாமென்றும், அந்த ஊதியம் கொடுக்கும் பொறுப்பை 'போர்டு' நிறுவனம் ஏற்றுக்கொள்ளும் என்றும் கூறியிருக்கிறார்.

ஆச்சாரியாருக்கு சர்க்கார் மறுப்பு

சென்னை, ஆக. 10—

பி. சி. ஜி. ஊசி குத்துவதை ஆட்சேபித்து, ஆச்சாரியார் வெளியிட்டுள்ள கருத்துக்கள், பிரசுரங்கள் ஆகியவற்றிற்குப் பதிலளிக்கும் முறையில், சென்னை சர்க்கார், 'பி. சி. ஜி பற்றிய உண்மை' என்ற தலைப்பிட்டு, ஒரு ஆங்கிலப் பிரசுரம் வெளியிட்டிருக்கின்றனர்.

சோவியத் ரஷ்யாவின் அணுசக்தி நிலையம்

விஞ்ஞானி தரும் விவரம்

ஜினீவா, ஆக. 10—

சென்ற ஆண்டு ஜூன் திங்களில் சோவியத் நாட்டில் துவக்கப்பட்ட அணுசக்தி நிலையத்தைப் பற்றிய விவரங்களை சோவியத் விஞ்ஞானி ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

இந்த அணுசக்தி நிலையம்தான் உலகிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுசக்தியை சமாதானத்திற்காகப் பயன்படுத்துவது குறித்து, இங்கு நடைபெறும் 72 நாடுகளின் விஞ்ஞானிகள் அடங்கிய அகில உலக மாநாட்டில் பேசுகையில், சோவியத் விஞ்ஞானி, அந்த அணுசக்தி நிலையம் இதுவரையிலும் 150 லட்சம் 'கிலோவாட் மணி' நேர மின்சார சக்தியை உற்பத்தி செய்துள்ளதெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய மாஞ்செடிகள்

சீனாவில் வேருன்றுகின்றனவாம்!

இந்தியப் பிரதமர் நேருவால் சீன சர்க்காருக்கு இலவசமாக அனுப்பித்தந்த 8 இந்தியமாஞ்செடிகள், சீனாவில், சீன—இந்தியக் கலப்பு மண்ணில் மிகச் செழிப்பாக வேரூன்றி வளர்ந்து வருகிறதாம்!

இந்த 8 மாஞ்செடிகளும், இந்தியாவில் காணப்படும் மாமரங்களின் ரகங்களில் முக்கியமான—மிக நல்ல 4 ரகங்களைச் சேர்ந்தனவாம்.

இவை, கடந்த இரண்டு திங்கட்களுக்கு முன்னர் இந்திய கலாசார தூதுக்குழுவின் தலைவரான ஏ. கே. சந்தா என்பவரால் சைனாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது நினைவிருக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.